**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8035 299

1. District : மாவட்டம் தஞ்சாவூர் PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2017 FIR No.: மு.த.அ. எண் 13/2017 Date: நாள் 16/11/2017

2. (i) Act சட்டம்: 7 of Prevention of Corruption Act, 1988 Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 14. 11. 2017 / 12.30 Hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் Complainant arrived 16.11.2017 / 11.00 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம் FIR Registerd 16.11.17/13.00 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சார் பதிவாளர் அலுவலகம், பாப்பாநாடு 35 Km தென்கிழக்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T. இராஜலிங்கம் (b) Father's/ ~~Husband~~'s Name : தந்தை / கணவர் பெயர் தியாகராஜன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1973 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம் (g) Address : முகவரி NO. 872, கீழ்மண் ரோடு, பாப்பாநாடு. ஒரத்தநாடு தாலுகா. தஞ்சாவூர் மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
தி. சுரேஷ், சார் பதிவாளர், பாப்பாநாடு, தஞ்சாவூர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
After Conducting Preliminary Enquiry FIR Registerd.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது:

தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய நான், 16.11.2017ம் தேதி காலை 11.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது ஒரத்தநாடு தாலுக்கா, பாப்பாநாட்டைச் சேர்ந்த திரு.முருகானந்தம், த/பெ.தியாகராஜன் என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்: T.முருகானந்தம், த/பெ.தியாகராஜன், 872, ஆம்பல் ரோடு, பாப்பாநாடு, ஒரத்தநாடு தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம். பெறுநர்: உயர்திரு லஞ்ச ஒழிப்பு அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்பு அலுவலகம், தஞ்சாவூர். அய்யா, நான் ஒரத்தநாடு தாலுக்கா பாப்பாநாடு, ஆம்பல் ரோட்டில் தாய் தந்தையுடன் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். துரைராஜ் ஜமீன் என்பவரது மனைவி தர்மசம்வர்த்தினியம்மாள் மற்றும் மகள் ராஜராஜேஸ்வரி அவர்களுக்கு சொந்தமான வேதவிஜயபுரம் கிழக்கு கிராம சர்வே எண். 7/10 வீட்டு மனை 8712 சதுரடிகள் விலைக்கு பேசி வாங்கி அவர்களிடம் கிரைய பத்திரத்தில் கையொப்பம் பெற்றும், அவர்களின் பத்திர பதிவு முகவரான

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant: 16-11-17
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16/11/17 / 15-10 Hrs

Name: பெயர் P. PADMAVATHI
Rank: நிலை Insp. No. எண் of Police
V & AC
Thanjavur
16/11/17

* GCP-240-34(Type 2) 90,000 Cps. 21.3.16(HCL-12)p.2

திரு.திருமாவளவன் என்பவர் 13.11.2017ந்தேதி பாப்பாநாடு சார் பதிவாளர் அலுவலகம் வந்து, அந்த இடத்தை தர்மசம்வர்த்தினியம்மாள் மற்றும் ராஜராஜேஸ்வரி ஆகியோருக்காக திருமாவளவன் கையெழுத்திட்டு என் பெயருக்கு கிரைய சாசனம் செய்து கொடுத்தார். அதன் சொத்து மதிப்பு ரூ.3,04,920/- ஆகும். ரூ.11,200/-க்கு முத்திரை தாள் பெற்றும், மீதியுள்ள முத்திரை தீர்வை ரூ.10,150/-ம் கொடுத்தேன். பினனர் பதிவுக் கட்டணம் ரூ.12,200/- என்றும், கணினி கட்டணம் ரூ.175/- என்றும், CD க்காக ரூ.50/-ம் கூடுதலாக ரூ.12,425/-ம் கேட்டார். அதனை கொடுத்தேன். இரண்டிற்கும் ரசீது கொடுத்தார். பின்னர் என் பெயரில் கிரைய சாசனம் செய்த சொத்தை பின்னர் அன்றைக்கே (13.11.2017) எனது அம்மா திருமதி.தி.சம்பூர்ணத்தம்மாள் பெயரில் செட்டில்மெண்ட் செய்ய வேண்டி ரூ.1,550/-க்கான முத்திரைத்தாள் கொண்ட பத்திரத்தை தாக்கல் செய்தேன். அதற்கு வித்தியாச முத்திரை தீர்வை கட்டணமாக ரூ. 1,500/-ம் கட்டினேன். அதற்கு ரசீது கொடுத்தார். செட்டில்மெண்ட் பதிவு கட்டணமாக ரூ.3,050/-ம் கணினி கட்டணமாக ரூ.130/-ம் சி.டி.க்காக ரூ.50/- கூடுதலாக ரூ. 3,230/-ம் கொடுத்தேன். அதற்கு ரசீது கொடுத்தார். பின்னர் நான் பத்திரங்கள் வாங்குவதற்கு எப்போது வரவேண்டும் என்று கேட்டேன். நாளை (14.11.2017) வாருங்கள் என்று சொன்னார். நானும் அவர் சொன்னபடி 14.11.2017ந்தேதி 12.30 மணிப்போல் பாப்பாநாடு சார் பதிவாளர் அலுவலகம் சென்று, சார் பதிவாளர் திரு.முருகன் என்பவரை சந்தித்து பத்திர பதிவிற்கான ரசீதை காட்டி பத்திரம் கேட்டேன். அதற்கு அவர் செய்கையில் வலது கைவிரல்களில் நான்கை காட்டி கேட்டார். நான் அப்போது எனக்கு தெளிவாக புரியவில்லை, எவ்வளவு என்று சொல்லுங்கள் சார், பீளிஸ் சார் என்று சொன்னேன். பின்னர் அதே சைகையில் நான்காயிரம் என காட்டி நாலு கொடு என்று சொன்னார். அப்போது எனக்கும் அவருக்கும் நடந்த உரையாடலை எனது கைபேசியில் பதிவு செய்தேன். பின்னர் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.4000/- கொடுக்க விருப்பமில்லை. 15.11.2017ந்தேதி லஞ்ச ஒழிப்பு அலுவலகம் சென்று புகார் கொடுக்க முடிவு செய்திருந்தேன். 15.11.2017ந்தேதி ஆம்பலாப்பட்டு கண்டியர் தெருவில் எனது சொந்தகாரர் நாகராஜ் என்பவருடைய அம்மா இறந்துவிட்டபடியால் அந்த துக்கத்திற்கு சென்றுவிட்டேன். நான் ஏற்கனவே முடிவு செய்திருந்தபடி இன்று 16.11.2017ந்தேதி 11.00 மணிக்கு தஞ்சாவூர் லஞ்ச ஒழிப்பு அலுவலகம் வந்து, என்னிடம் லஞ்சமாக ரூ.4000/-கேட்ட பாப்பாநாடு சார் பதிவாளர் திரு.முருகன் மீது நடவடிக்கை எடுக்ககோரிய புகார் மனுவுடனும், 13.11.2017ந் தேதி பதிவு செய்த பத்திரத்தை கொடுப்பதற்கு கேட்ட லஞ்ச பணம் ரூ.4000/-த்துடனும், 13.11.2017ந்தேதி சார் பதிவாளர் எனக்கு வழங்கிய கிரைய பத்திரம் மற்றும் செட்டில்மெண்டிற்குண்டான முத்திரை தாள் கட்டணம் மற்றும் பதிவுக்கட்டணம் ஆகியவற்றிக்குண்டான நான்கு அசல் ரசீதுக்களை இத்துடன் இணைத்துள்ளேன். அத்துடன் உரையாடல் பதிவு செய்யப்பட்ட கைபேசியை ஒப்படைக்கிறேன். என்னுடைய கிரைய சாசன பத்திரம் மற்றும் என் அம்மா செட்டில்மெண்ட் பத்திரத்தை

கொடுப்பதற்கு லஞ்சமாக ரூ.4000/- கேட்ட பாப்பாநாடு சார் பதிவாளர் திரு.முருகன் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்) T.Muruganantham. 16-11-2017.

அம்மா,

16.11.2017 ந் தேதி காலை 11.00 மணிக்கு நான் அலுவலகத்தில் இருந்தபோது T.முருகானந்தம், த/பெ.தியாகராஜன், 872, ஆம்பல் ரோடு, பாப்பாநாடு, ஒரத்தநாடு தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அப்புகார் மனு மீது முதல் விசாரணை செய்ய அனுமதி கோரி, காவல் கண்காணிப்பாளர் தென் சரகம், சென்னை ஊ.த.க. அவர்களுக்கு புகார் மனுவின் நகல் மின் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. Sd/- P.Padmavathi, Inspr. of Police, V&AC, Thanjavur. 16/11/17.

16.11.2017 ஆம் தேதி 12.30 மணிக்கு மேற்படி புகார் மீது முதல் விசாரணை மேற்கொள்ள கிடைக்கப்பெற்ற குறிப்பாணை PE.384/2017/REGN/TH -ன்படி முதல் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. Sd/- P.Padmavathi, Inspr. of Police, V&AC, Thanjavur. 16/11/17.

முதல் விசாரணையில் மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்களை பரிசீலணை செய்தேன். பின்பு மேற்படி மனுதாரர் ஆஜர்படுத்திய தனது செல்போனில் பதிவு செய்யப்பட்டிருந்த, மனுதாரருக்கும், எதிரிக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் விவரங்கள் ஆடியோ பதிவு செய்யப்பட்டிருந்ததை, கேட்ட பிறகு, எனது அலுவலக கணிணியில் மேற்படி ஆடியோ விவரத்தை பதிவிறக்கம் செய்த பிறகு, செல்போனை மனுதாரரிடம் ஒப்படைக்கப்பட்டது. பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆடியோ விபரத்தை ஒரு CDயில் பதிவிறக்கம் செய்தேன். மேற்படி ஆடியோவில் எதிரி புகார்தாரரிடம் லஞ்சம் கேட்டதற்கான முகாந்திரம் இருந்தது. இது குறித்து உரிய தகவல் காவல் கண்காணிப்பாளர் தென் சரகம், சென்னை ஊ.த.க. அவர்களுக்கு தெரிவித்தும், மேற்படி புகார் மனு மீது 16.11.2017 ஆம் தேதி 13.00 மணியளவில் தஞ்சாவூர் V&AC Cr.No.12/2017 u/s 7 of P.C. Act, 1988 - ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. Sd/- P.Padmavathi, Inspr. of Police, V&AC, Thanjavur. 16/11/17.

அசல் முதல் தகவல் அறிக்கை, அசல் புகார் மனு மற்றும் இணைப்புகள், ஆடியோ பதிவிறக்கம் செய்யப்பட்ட CD ஒன்றையும் இணைத்து கனம் முதன்மை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தஞ்சாவூர் @ கும்பகோணம் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், முதல்தகவல் அறிக்கை நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல் கோப்பில் வைக்கப்பட்டது.

16/11/17
Inspr. of Police
V&AC, Thanjavur
16/11/17.